மீதமுள்ள தொகையை மாதாந்திரத் தவணையாகச் செலுத்துகின்ற திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தரமணி பகுதியில் 128 நபர்கள் ஒதுக்கீடு பெற்றுள்ளனர். எனவே, இலவசமாக வழங்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் மூலமாகத் துவக்கப்பட்டபோது எந்த நோக்கத்தோடு துவக்கப்பட்டது? இதில் அரசினுடைய மானியம், கடனாக வழங்கப்பட்டு இருக்கிறதா அல்லது மானியமாகவே வழங்கப்பட்டு இருக்கிறதா? குடிசை வாழ் மக்களுக்கு அதை இலவசமாக அளிக்கத்தானே திட்டம் துவங்கப்பட்டது? இப்போது திடீரென்று விலை நிர்ணயிக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் ஹட்கோ நிதி உதவியுடன் - 30 சதவீதம் அரசு மானியமும், ஹட்கோவின் 70% கடனுதவியுடனும் குடிசை மாற்று வாரியத்திற்காக இது திட்டமிடப்பட்டு, இடையில் 1989ஆம் ஆண்டு அங்கே பிலிம் இன்ஸ்டிடியூட்டுக்காக, தரமணியில் உள்ள செய்தித் துறையில் வேலை செய்பவர்கள் சேர்க்கப்பட்டு பின்னர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மறுபடியும் அவர்கள் தேவை இல்லை என்று கொடுத்ததன் காரணமாக இந்தத் திட்டம் குறைந்த வருவாய்த் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 434, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**434—**

**ஒரத்துப்பாளையம் அணைத் தண்ணீரைச் சுத்தப்படுத்துதல்**

***3857—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஒரத்துப்பாளையம் அணைத் தண்ணீர் விஷத் தன்மையுள்ளது என்று அரசிற்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

TRUTH ALONE TRIUMPHS

1998 மே 5]

(ஆ) ஆம் எனில், தண்ணீரைச் சுத்தப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம். ஈரோடு மாவட்டத்திலுள்ள ஒரத்துப்பாளையம் அணைக்கட்டுத் தண்ணீர் பற்றிய புகார் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பெறப்பட்டது. திருப்பூர் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்துள்ள இடத்தில் அமைந்துள்ள 752 சாயத் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் நகராட்சி வெளியேற்றும் வடிகால் கழிவுநீர், நொய்யல் ஆற்றில் கலந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள ஒரத்துப்பாளையம் அணைக்கட்டை அடைவதால் அணைக்கட்டின் நீரின் தன்மை மாசுபடுகிறது. அணைக்கட்டிற்கு வரும் நீரின் மாசினைக் குறைக்கும்பொருட்டு, திருப்பூர் பகுதியில் அமைந்துள்ள சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவுகளினால் நீரின் தரம் மாசு அடைவதைத் தவிர்க்க மேற்படி சாயத் தொழிற்சாலைகள் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரத்துப்பாளையம் அணைக்கட்டில் தேங்கியுள்ள மாசுபட்ட தண்ணீரைத் திறந்துவிட்டதன் காரணமாக, கால்நடைகள் உயிரிழப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் கூறப்பட்டது. அப்படி ஏதேனும் அரசுக்குத் தகவல் வந்து இருக்கிறதா? அப்படியாயின் கால்நடை இழப்புகளுக்கு நஷ்டஈடு ஏதேனும் அரசு கொடுத்து இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எந்த இழப்பும் கால்நடைகளுக்கோ, மற்றவைகளுக்கோ ஏற்படவில்லை. காரணம், கடந்த ஆண்டு கடுமையான மழையின் காரணமாக காவிரியிலே வெள்ளம் பெரிய அளவிலே ஓடிக் கொண்டு இருந்தபோதுதான் அந்த அணையைத் திறந்து வைக்கின்ற நிலை ஏற்பட்டது. இதெல்லாம் கடந்த காலத்திலே நடைபெற்றதை வைத்துச் சொல்லப்படுகின்றது என்றுதான் நான் கருதுகின்றேன்;

அப்படிப்பட்ட நிலை தற்போது எதுவும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**Thiru N.S. Rajkumar Mandraadiyar:** Hon. Speaker Sir, it has been made obligatory for the dyers and bleachers to cleanse the Noyyal bed. They ask why the responsibility be fixed on them alone when.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றாகத் தமிழ் பேசுவீர்களே!

**Thiru N.S. Rajkumar Mandraadiyar:** ..... enroute, there are other industrial units who also cause the problem. I wish to ask the Hon. Minister whether the Government will come forward to do the cleansing work on its own?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ரிட் எண் *1640/96* என்ற ரிட் மனு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த மனுவினுடைய இறுதியாக, ஆலைக்காரர்களும், பப்ளிக் இன்ட்ரஸ்ட் லிட்டிகேஷனைச் சேர்ந்தவர்களும் ஓர் ஒப்பந்தத்தை-ஒரத்துப்பாளையம் அணைக்கட்டைச் சுத்தம் செய்கின்ற பணியை ஏற்றுக் கொண்டு, அந்த அடிப்படையிலே அந்த இருவர் மட்டும் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தோடு அந்தநேரத்திலே கலந்து கொள்ளாமல், தெளிவாக நீதிபதியிடமே ஒரு அண்டர்டேக்கிங், உறுதிமொழி கொடுத்து இருக்கிறார்கள். அதையொட்டிய பேச்சுவார்த்தை, வருகின்ற 7ஆம் தேதி மூன்று தரப்பும் ஒழுங்காக உட்கார்ந்து விவாதித்து, முறையாக மக்களுடைய நல்னைப் பாதுகாக்கின்ற பணியையும் கருத்திலே கொண்டு, ஆலையினுடைய நிலை, ஆலையினுடைய உற்பத்தித் திறனைக் குறைக்காமல் வர்த்தக ரீதியாகக் கணக்கையும் எடுத்து, எப்படி எதிர்காலத்திலே செயல்படுவது என்று அந்தத் துறை சம்பந்தமான அனைவரும், குறிப்பாக, மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் சொன்னார்களே, எலக்ட்ரிசிட்டி போர்டு, பி. டபிள்யூ. டி., ஹைவேஸ், சென்னை மெட்ரோபாலிட்டன் டெவலப்மெண்ட் அத்தாரிட்டி, இப்படிப்பட்ட அனைத்துத் துறை அதிகாரிகளும், சம்பந்தப்பட்ட தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று, நாளை 7-ம்தேதி கூட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ்குமார் மன்றாடியார் அவர்களும் அதிலே கலந்து கொள்கிறார்கள்.

1998 மே 5]

ஆகவே, அந்த 7-ம் தேதி கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. அ. ஆண்டமுத்து.

**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணையில், சவுத் இந்தியா விஸ்கோஸ் என்ற பேக்டரியிலிருந்து விஷத் தன்மை வாய்ந்த நீர் வந்து கலப்பதால், அங்கே ஏராளமான மீன்கள் இறந்துவிட்டன. சுமார் 5 இலட்சம் மீன்கள் இறந்துவிட்டன என்று அங்கேயுள்ள மீனவர்கள் அரசுக்கு மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். அது குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என அறிய விரும்புகிறேன். இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, தனிக் கேள்வி போட்டால்தான் விவரமான பதிலைச் சொல்ல இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 435, திரு. அ. லெ. சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**435—**

**சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்த்தல்**

***6690—திரு. அ. லெ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாமிரத் தகடு ஆலையினால் சுற்றுப்புறச் சூழல் மிகவும் மாசுபடும் என்பது குறித்து அரசுக்குப் பொதுமக்கள் மற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து புகார் மனுக்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆமெனில், அரசு அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?